www.kdu.lk

முழுப்பதிப்புரிமையுடையது.

TP.NO – 0741819705



JAFFNA EDUCATION

YouTube channel

4

தரம் - 5 புலமைப்பரிசில் இறுதி விசேட மாதிரிப்பரீட்சை - 2022

வினாத்தாள் I

சுட்டெண் :-.....

ஒரு மணித்தியாலம்

ஆசிரியர் -
P.A.சசிகுமார்- B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass.Dip.in.Primary(Merid). SLEAS (Primary)

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
பெற்றோர்	
ஆசிரியர்	



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

01. பின்வரும் உருக்களில் உரு A இனைப் போல உரு B இனை மாற்றுவதற்கு உரு B இல் எத்தனை மாற்றங்கள் செய்ய வேண்டும்?




உரு A




உரு B

(1) 3 *(2)* 4 *(3)* 5


02. பெரிய பாத்திரத்திலுள்ள நீரைச் சிறிய குவளைக்குள் ஊற்றும்போது நீரின் அமைவைச் சரியான முறையில் காட்டும் உருவாக அமைவது எது?



(1)




(2)



(3)


03. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது அந்த உருவைத் தெரிக



(1)



(2)




(3)

04. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான மூன்று பிராணிகளும் எவை?



(A)



(B)



(C)




(D)



(E)

(1) D, A, B (2) A, E, B (3) B, C, D

05. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





(1)




(2)



(3)

06. கட்டத்திலுள்ள உருத்துண்டுகளைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய தனி உரு எது?





(1) (2) (3)

07. "வாகனம் ஒன்று வீதிக் குறியீடுகளை அனுசரித்து பிரயாணம் செய்யாது வேகமாக, ஒலி எழுப்பியபடி வீதியில் சென்றது." இக்கூற்றுப் பிழையானது. இக்கூற்றினைச் சரியாக்குவதற்கு வாக்கியத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றம் எது?

(1) "வேகமாக" என்பதற்குப் பதிலாக "மெதுவாக" என்ற சொல்லைச் சேர்த்தல்.

(2) "ஒலி" என்பதற்குப் பதிலாக "ஒளி" என்ற சொல்லைச் சேர்த்தல்.

(3) "வாகனம்" என்பதற்குப் பதிலாக "அம்புலன்ஸ்" என்ற சொல்லைச் சேர்த்தல்.


- குழுச் செயற்பாடு ஒன்றின்போது தரம் 5 மாணவர்கள் சொற்கள் உள்ள அட்டைகளை அடுக்கி வைத்திருக்குக்கும் கோலத்தை விளங்கிக் கொண்டு விடைதருக.

புதல்வி	திறப்பு	புறத்தி	……..	புகழ்ச்சி	கரும்பு

08. இடை வெளிக்குப் பொருத்தமான அட்டையைத் தெரிக.

(1) சிறப்பு (2) அம்பு (3) நகைப்பு

09. தரப்படும் கோலத்திற்கு ஏற்ப இடைவெளிக்குப் பொருத்தமான கோலத்தை தெரிக.



1ஆவது சந்தர்ப்பம் 2ஆவது சந்தர்ப்பம் 3ஆவது சந்தர்ப்பம் 5ஆவது சந்தர்ப்பம்





(1) (2) (3)

10. இன்னொருவரால் எனக்கு வழங்கப்பட்டது, அது எனக்குரியது ஆனால் என்னை விட ஏனையவர்களே அதனை அதிகம் பயன்படுத்துகின்றனர். இங்கு குறிப்பிடப்படுவது.


(1) பரிசு (2) பணம் (3) பெயர்

11. ஒரு புத்தகத்தின் இரு பக்கங்களில் ஆங்கில எழுத்துக்கள் ஒரு குறித்த விதத்தில் இருப்பதை உரு காட்டுகிறது. அதனை இனங்கண்டு அதே விதத்தில் எழுத்துக்கள் இருக்கும் பக்கங்களைக் காட்டும் உருவைத் தெரிவுசெய்க.






(1)




(2)



(3)

12. துவாரகன் தனது தொலைபேசி இலக்கத்தினை நண்பனுக்கு நேரடியாக வழங்காமல் தன்னால் வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களில் முன் உள்ள இலக்கங்களை எழுதினால் தனது உண்மையான தொலைபேசி இலக்கத்தினை அறிய முடியும் என்றான். அவன் வழங்கிய இலக்கம் **8269543875** எனின், துவாரகனின் உண்மையான இலக்கமாக இருக்கக்கூடியது எது?

(1) 8269543874 (2) 7158432764 (3) 7158632764

13. 

அருகில் உள்ள உருவை முறிகோடு வழியாக மடித்துப் புள்ளிக் கோடு வழியாக வெட்டினால் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 6 (3) 5

14. தாயக்கட்டை ஒன்றினை மேலே சுண்டியபோது அது விழுந்த முகங்களின் தடவைகள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

முகங்கள்	1	2	3	4	5	6
விழுந்த தடவைகளின் எண்ணிக்கை	4	1	2	5	2	....


இலக்கம் 6 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையானது இலக்கம் 2 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையின் ஐந்து மடங்காகும் எனின், தாயக்கட்டையானது மேலே சுண்டிவிடப்பட்ட மொத்த தடவைகள் எத்தனை?

(1) 24 (2) 19 (3) 34

15. கீழே தரப்பட்ட இலக்கங்களில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு இலக்கங்களைக் கூட்டும்போது 11 ஆக வரக்கூடிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எத்தனை?

7	5	1	3	4	9	6	2	8

(1) 4 (2) 5 (3) 6


16. 

அருகே உள்ள உருக்கள் ஒரே தராசில் தனித்தனியே மீன், ஆமை என்பவற்றை அளக்கின்ற இரண்டு சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன. ஆமையின் நிறை 10 கிலோகிராம் எனின் ஆமை, மீன் ஆகியவற்றின் மொத்த நிறை யாது?

(1) 10 kg (2) 17 kg (3) 24 kg

17. சமீர தன்னிடம் உள்ள சிறுகதைப் புத்தகமொன்றினை நாளுக்கு ஒரு பக்கம் என வாசித்தான். 06 ஆவது பக்கத்தை வாசிக்கும்போது நேற்றைய தினத்துடன் புத்தகத்தின் ¼ பங்கு பக்கங்களை வாசித்து முடித்து விட்டதாக நண்பனுக்கு கூறினான் எனின், அப்புத்தகத்தை வாசித்து முடிக்க சமீரவுக்கு மேலும் எத்தனை நாட்கள் தேவை?


(1) 15 (2) 14 (3) 18

18. 

மாணவன் ஒருவன் குறித்த வட்டங்களை வரைந்து வட்டம் A இல் தொடங்கி அம்புக்குறி காட்டும் ஒழுங்கில் அடுத்தடுத்துப் பாயத்தொடங்கி A இல் நிறைவு செய்தான். இந்த ஒழுங்கில் எத்தனையாவது பாய்ச்சலில் அவன் வட்டம் E இனை அடைந்திருக்க முடியும்?

(1) 5 ஆவது (2) 7 ஆவது (3) 8 ஆவது


19. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



(1) 5
(2) 4
(3) 8

20. மகேசன், சநகன், கபிலன், ஆகியோரது பெயர்கள் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி இரகசியக் குறியீட்டு முறையில் எழுதப்பட்டன. இம் மூன்று நபர்களினதும் பெயர்கள் சரியாக எழுதப்பட்ட விடை எது?.

(1) MKSN, SPSN, KNQN (2) UKNS, PQRS, LMNO (3) BQRS, RTUS, UMVS


21. 

இவ் உருவில். காட்டப்பட்ட தட்டுகளை அவதானியுங்கள் அதற்கமைய ஒரு வட்டம் எத்தனை முக்கோணிகளுக்கு சமனாக இருக்க முடியும்?

(1) 4 (2) 2 (3) 1

22. குமணன் நான்கு ஆண்டுகளுக்கொரு முறை தனது வீட்டிற்கு புதிதாக தீந்தை பூசிக்கொள்வார். 2021 ஆம் ஆண்டு தனது நண்பனிடம் இன்னும் இரண்டு வருடங்களில் தீந்தை பூசுவது 6 ஆவது தடவை எனக் கூறினார். எனின், அவர் 4 ஆவது தடவை வீட்டிற்கு தீந்தை பூசிய ஆண்டு எது?

(1) 2016 (2) 2015 (3) 2020

23. 

குறித்த மாயப் பொறியில் சில மாபிள்கள் P இனுள் இடப்பட்டன. அவை Q வில் விழுந்ததும் 4 மடங்காகிப் பின் R இல் விழுந்ததும் 2 மடங்காகியது, இறுதியில் S இல் விழும் போது இரண்டு மடங்காகி 160 மாபிள்கள் காணப்பட்டன எனின், ஆரம்பத்தில் P இடப்பட்ட மாபிள்களின் எண்ணிக்கை எத்தனை?


(1) 10 (2) 15 (3) 20


24. இராகவனின் ஆண்பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு சகோதரர்கள் வீதம் உள்ளனர் எனின், இராகவனுக்கு எத்தனை ஆண்பிள்ளைகள் இருக்க முடியும்?


(1) 2 (2) 3 (3) 4

www.kdu.lk
JAFFNA EDUCATION YOUTUBE


25. சதுர வடிவக் கடதாசி உரு 1 இல் காட்டப்பட்டவாறு. புள்ளிக்கோடு வழியே மடிக்கப்பட்டு உரு 2 பெறப்பட்ட பின் 3 துளைகள் இடப்பட்டு மீண்டும் விரிக்கும்போது தோன்றக்கூடிய விதம் எது?


உரு 1


உரு 2


(1)


(2)


(3)

26. வீடொன்றில் ஒரு நாள் நடைபெற்ற ஐந்து சந்தர்ப்பங்களை உருக்கள் காட்டுகின்றன. இச் சந்தர்ப்பங்களை ஒழுங்கில் வரிசைப்படுத்தும்போது சரியாக அமையும் ஒழுங்கு முறை எது?


A


B


C


D


E

(1) B,D,A,C,E (2) D,B,A,E,C (3) D,B,A,C,E

27. தரம் ஐந்து வகுப்பொன்றில் தமிழ் கணிதம் ஆங்கிலம் சிங்களம் சமயம் என்ற ஒழுங்கில் தினமும் பாடங்கள் நடைபெற்றன. நான்கு நண்பர்களில் சகாரா, சகானா, சரோயா ஆகியோர் ஐந்து பாடங்களையும் கற்றனர். திடீர் சுகவீனம் காரணமாக சஸ்வினா மட்டும் தொடர்ந்து அடுத்துவரும் மூன்று பாடங்களைக் கற்க முடியவில்லை எனின், சஸ்வினா நிச்சயமாக கற்காத பாடம் எது?

(1) கணிதம (2) ஆங்கிலம் (3) சிங்களம்

28. கவி 60 கையுறைகளைத் தைக்கும் நேரத்தில் அமலி 80 கையுறைகளைத் தைப்பாள். அமலி 40 கையுறைகளைத் தைக்கும் நேரத்தில் ரமணி 20 கையுறைகளைத் தைப்பாள் எனின், ரமணி 10 கையுறைகளைத் தைக்கும் நேரத்தில் கவி எத்தனை கையுறைகளைத் தைப்பாள்?

(1) 30 (2) 20 (3) 15

29. உரு B இலுள்ள வடிவத்தின் எத்தனை வெவ்வேறு அமைவுகள் உரு A இல் உள்ளன?



உரு A


உரு B

(1) 3 (2) 6 (3) 5

30. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் சிறுவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டி ஒன்றில் ஐந்து மாணவர்கள் பங்குபற்றினர். ஒவ்வொருவரிடமும் வினாக்கள் கேட்கப்பட்டன. வினா ஒன்றிற்கு சரியாக விடை அளித்தால் 5 புள்ளிகளும் தவறான விடை அளித்தால் 2 புள்ளிகளும் கழிக்கப்பட்டன. அப்போட்டியில் ஒரு மாணவன் 11 புள்ளிகளைப் பெற்றான் எனின் அவனிடம் கேட்கப்பட்ட வினாக்கள் எத்தனை?

(1) 3 (2) 4 (3) 5

31. 

தந்தை ஒருவர் தரண்யா, தன்சியா ஆகிய தனது இரண்டு பிள்ளைகளுக்கும் ஒரு தொகைப்பணத்தைப் பகிர்ந்தளித்தார். தன்சியாவை விட தரண்யாவுக்கு ரூபாய் 7 இனை அதிகமாகக் கொடுத்தார் என்பதை அருகே உள்ள வரைபு காட்டுகிறது. எனின், இரு பிள்ளைக்கும் கிடைத்த மொத்தப் பணம் எவ்வளவு?

(1) 35 ரூபாய் (2) 65 ரூபாய் (3) 63 ரூபாய்

32. ஒரு உண்டியலிலுள்ள பத்து ரூபாய்க் குற்றிகளினதும் ஐந்து ரூபாய்க் குற்றிகளினதும் மொத்த எண்ணிக்கை உண்டியலிலுள்ள ஐந்து ரூபாய்க் குற்றிகளின் எண்ணிக்கையினதும் இரு மடங்காகும். இதற்கு ஏற்ப பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது ?


(1) ஐந்து ரூபாய்க் குற்றிகளின் எண்ணிக்கை பத்து ரூபாய்க் குற்றிகளினது எண்ணிக்கையிலும் அதிகமாகும்.
(2) ஐந்து ரூபாய்க் குற்றிகளின் எண்ணிக்கையும் பத்து ரூபாய்க் குற்றிகளினது எண்ணிக்கையும் சமமாகும்.
(3) பத்து ரூபாய்க் குற்றிகளின் எண்ணிக்கை ஐந்து ரூபாய்க் குற்றிகளினது எண்ணிக்கையிலும் அதிகமாகும்.

33. பின்வரும் உரு நிரையில் உள்ள கோலத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களிலும் இருக்க வேண்டிய உருச்சோடியைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3) 

34. பிராணிகள், பறப்பவை, பாலூட்டிகள், குரங்கு, வெளவால் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புடமை பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய Z இன் மூலம் வகை குறிக்கப்படுவது எது?



(1) வெளவால் (2) குரங்கு (3) பாலூட்டிகள்

35. பெரிய சுவர் ஒன்றில் 20 மீற்றர் இடைவெளியில் சிலந்தி ஒன்றும் பல்லி ஒன்றும் இருந்தன. சிலந்தியைப் பிடிப்பதற்குப் பல்லி நகரத் தொடங்கிய அதே கணத்தில் சிலந்தியும் ஓடத்தொடங்கியது. சிலந்தியின் இரு மடங்கான வேகத்தில் பல்லியும் துரத்தியது எனின், பல்லி சிலந்தியை எத்தனை மீற்றரில் பிடித்திருக்கும்?

(1) 20 மீற்றர் (2) 30 மீற்றர் (3) 40 மீற்றர்

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

36. 

அருகே தரப்பட்டுள்ள திண்ம உருவானது ஒரே அளவான கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டி ஆக்கப்பட்டுள்ளது. இதன்படி இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள கனவுருக்களின் எண்ணிக்கை எத்தனை.?

(1) 12 *(2)* 16 *(3)* 18

37. ஒரு வருட இடைவெளியில் பிறந்த சகோதரர்கள் முறையே நிமலன், விமலன், காந்தன், சபேசன், கணேசன் ஆகியோரது வயதுகளின் கூட்டுத்தொகை 60 ஆகும் எனின், ஆறு வருடங்களுக்கு முன்னர் இரண்டாவதாகப் பிறந்த விமலனின் வயது எத்தனை?

(1) 9 *(2) 8* *(3) 7*

38. பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்தில் 1 - 16 வரையான இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டு ஒரு கோலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனின், A, B ஆகிய இடைவெளிகளுக்கும் முறையே பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

1		4		3		2	
	6		7		8		5
9		A		B		10	
	14		15		16		13

11	12	

(1)

12	11	

(2)

11	17	

(3)

39. ஒரு நிறுவனத்தில் வருகை தந்த ஊழியர்கள் 10 பேருக்கு காலை உணவாக இரண்டு நாட்களுக்கு 10 இறாத்தல் பாண் தேவை எனின், 5 ஊழியர்களுக்கு நான்கு நாட்களுக்கு காலை உணவை வழங்க எத்தனை இறாத்தல் பாண் தேவை?

(1) 10 *(2)* 5 *(3)* 20

40. X, Y, Z ஆகிய மூன்று பழக்கூடைகளில் பின்வருமாறு பழங்கள் இருக்கின்றன.

- கூடை Z இல் இருக்கும் பழங்களின் எண்ணிக்கையிலும் மூன்று மடங்கு பழங்கள் கூடை Y இல் இருக்கின்றன.
- Y,Z ஆகிய இரு கூடைகளிலும் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை கூடை X இலுள்ள பழங்களின் எண்ணிக்கைக்கு சமன்.
- கூடை X இல் இருந்து இரண்டு பழங்களை கூடை Z இற்கு மாற்றினால் X,Y கூடைகளில் இருக்கும் பழங்களின் எண்ணிக்கை சமன் ஆகும் எனின், மூன்று கூடைகளிலும் உள்ள மொத்தப் பழங்கள் எத்தனை?

(1) 16 *(2) 9* *(3) 14*

★★★

முற்றிலும் இலவசமாக இந்த வினாத்தாளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்

JAFFNA EDUCATION YOUTUBE

www.kdu.lk

முழுப்பதிப்புரிமையுடையது

TP.NO - 0741819705



JAFFNA EDUCATION
YouTube channel

4

தரம் - 5 புலமைப்பரிசில் இறுதி விசேட மாதிரிப்பரீட்சை - 2022

வினாத்தாள் II

சுட்டெண் :-.....

1 மணித்தியாலம் 15 நிமிடம்

ஆசிரியர் -
P.A.சசிகுமார் -B.A(Hon) .B.Ed(Hon).PGDE(1st class). M.Ed(1stclass),Dip.in.Primary(Merid). SLEAS

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தம் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
பெற்றோர்	
ஆசிரியர்	



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

மாலாவின் பூந்தோட்டத்தில் வண்ண வண்ணப் பூக்கள் பூக்கும் பூஞ்செடிகள் இருந்தன. பூந்தோட்டத்திற்கு தேன் குடிப்பதற்காக அழகிய வண்ணத்துப்பூச்சிகள், சிட்டுக்குருவிகள், தேனீக்கள் ஆகியன கூட்டங் கூட்டமாக வந்தன. அவை யாவும் மாலாவின் நண்பர்கள். ஒவ்வொரு நாளும் காலையில் மாலா பூந்தோட்டத்திற்குச் சென்று இந்த நண்பர்களுடன் உரையாடுவாள். ஒரு நாள் காலையில் மாலா பூந்தோட்டத்திற்குச் செல்லவில்லை. நல்ல நித்திரையில் இருந்தாள். நண்பர்கள் கவலைப்பட்டனர். நண்பர்கள் எல்லோரும் மாலாவின் அறையைச் சுற்றி வட்டமிட்டவாறு மாலாவை அழைத்தனர். நண்பர்களின் குரல் மாலாவிற்குக் கேட்டது. யன்னலைத் திறந்து வெளியே பார்த்தாள். நண்பர்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள். மாலா பூந்தோட்டத்திற்குச் சென்று நண்பர்களுடன் உரையாடினாள். அனைவரும் களிப்புடன் நடனமாடினர்.

- ***பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.***

(i) பூந்தோட்டத்திற்கு வருகை தந்தவை எவை?

……

(ii) தேனீக்கள் கூட்டங் கூட்டமாக எதற்காகப் பூந்தோட்டம் வந்தன?

……..

(iii) மாலா பூந்தோட்டம் செல்லாமைக்கான காரணம் யாது?

……..

(iv) "துக்கப்பட்டனர்" என்பதனைக் குறிப்பிடுவதற்காகப் பந்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?

……..

(v) அ.ஃறிணைப் பன்மை இறந்தகால வினைச் சொல்லை எழுதுக.

…… ……

(vi) பந்தியில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழிச் சொற்கள் இரண்டு தருக.

……

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.

மழை காளத்தில் டெங்கு நுளம்பினால் காச்சல் பரவி உயிர் ஆபத்து ஏற்படும்.

……

……

3. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி எதிர்கால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

(i) குயில் கூட்டிலை இருந்தது. ……

(ii) மரங்கள் கோடை காலத்திலை வாடின. ……..

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்தார் (……..)

(ii) யானைக் கூட்டம் மெதுவாக ஓடின. (……..)

(iii) பாபு கீதாவுடன் சந்தைக்குச் சென்றனர். (……)

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

மரஞ் செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன

JAFFNA EDUCATION

www.lkdu.lk

சுட்டெண்.....

6. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

(i) பலவர்ணப் / வாழ்ந்தன / மரங்களில் / உயர்ந்த / பறவைகள்

.....

(ii) விளங்குகின்றன / உயர்ந்து / உலகில் / நாடுகள் / போற்றும் / உழைப்பைப்

.....

7. தரப்படும் திருக்குறளில் காணப்படும் இடைவெளியினை நிரப்பிப் பூரணப்படுத்துங்கள்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
..... உளன்."

8. பின்வரும் வாக்கியத்தை பெண்பால், ஒருமை, இறந்தகால வாக்கியமாக எழுதுக.

உழவன் நாளை வயலில் களை பிடுங்குவான்

.....

9. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

கோபம் சிந்தனைக்கு தடையாகும்

.....

10. பின்வரும் அடுக்குத்தொடர்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக

மெல்ல மெல்ல, சின்னச் சின்னக், அள்ளி அள்ளிக், துள்ளித் துள்ளி, வண்ண வண்ணப்

(i) அமலன் நீரை ..... குளித்தான்.

(ii) நான் ..... பறவைகளைக் கண்டு இரசித்தேன்.

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Grasshopper : ..... (ii) Desert ;.....

12. தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



H					h			



F			g	

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக

(i) game/play/ a/Let's ;.....

(ii) in /live / our/ country / We ;.....

www.lkdu.lk

14. **" எத்தனட்ட துவன்ன " என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

……...

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.**

"நேரம் என்ன? சொல்லுங்கள்."

……

16. 'ஆறாயிரத்து எண்பத்து நான்கு' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக ……

17. *5437* இல் இலக்கம் நான்கினால் காட்டப்படும் பெறுமதி யாது? ……

18.

6	3
8	

கட்டத்திலுள்ள இலக்கங்களைக்கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

……

19. எண் கோலத்திற்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக.

……, ……..., *96*, *103*, *110*

20. வியாபாரி ஒருவரினால் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது

மாதம் / பழ வகை	மார்ச்	யூன்
மாம்பழம்	1532	1505
அன்னாசி	836	911
தோடம்பழம்	2462	2810

(i) யூன் மாதம் விற்கப்பட்ட மாம்பழங்கள் எத்தனை?

……

(ii) மார்ச், யூன் இரண்டு மாதங்களிலும் விற்பனை செய்யப்பட்ட தோடம்பழங்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

……

21. 204 இனை 4 இனால் பெருக்கும்போது வரும் விடை யாது?……


22. 1*l* 500*ml* வர்ணச் சாயத்திற்கு 750*ml* நீர் சேர்க்கப்பட்டு கலவையொன்று தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட கலவையின் மொத்த அளவு யாது?

…… *l* …… *ml*

23. கவுண் ஒன்று தைப்பதற்கு மூன்று மீற்றர் துணி தேவை 96 மீற்றர் துணியில் எத்தனை கவுண்கள் தைக்க முடியும்?

……

24.



அருகில் உள்ள துவிச்சக்கர வண்டிகளில் உள்ள ¾ சில்லுகள் எத்தனை? ……

25. ஒன்றின் விலை 34.50 வீதம் 6 அப்பியாசப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு ரூபாய் 500 நாணயத் தாளினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

ரூபாய் ……..

JAFFNA EDUCATION

26. 5 மீற்றர் நீளமான குற்றி ஒன்றில் இருந்து ஒவ்வொன்றும் 1 மீற்றர் 75 சென்ரி மீற்றர் நீளமான இரண்டு சிறிய குற்றிகளை வெட்டி நீக்கினால் எஞ்சிய குற்றியின் அளவு எவ்வளவு?

..... m ..... cm


27. பை ஒன்றில் 3kg 750 g பாசிப்பயறு இருந்தது. அதற்குள் மேலும் 4kg 350 g பாசிப்பயறு இடப்பட்டது இப்போது பையிலுள்ள பாசிப்பயற்றின் மொத்த நிறை யாது?

..... kg .....g

28. சரத் ஓர் இடத்திலிருந்து வடக்குத் திசையில் 6m சென்று அவனது இடது கைப்பக்கமாகத் திரும்பி, மேலும் 6m சென்றான். அவ்விடத்திலிருந்து தெற்குத் திசையில் 6m சென்றான் எனின், அவன் இப்போது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து எந்தத் திசையில் உள்ளான்?

.....

29. மாணவர் குழுவொன்று விரும்பிய நிறங்களின் வகைகள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள வரைபில் தரப்பட்டுள்ளன.



(i) நிறங்களை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) பச்சை நிறத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை நீல நிறத்தை விரும்பும் மாணவர் எண்ணிக்கையிலும் எத்தனை அதிகம்?

.....

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'உலக மரபுரிமையாக' கணிப்புப் பெற்றவற்றை மட்டும் கொண்ட விடை எது?

(1) சிகிரியா, தலதாமாளிகை, விகாரைகள்
(2) சிங்கராஜவனம், சிகிரியா, தலதாமாளிகை
(3) பொம்மலாட்டம், திரிபீடகம், மகாபோதிவிருட்சம்

31 உடலில் கொழுப்புச் சத்து அதிகம் குறைவதால் ஏற்படக்கூடிய விளைவுகளில் ஒன்று.

(1) உடல் எடை குறைதல்
(2) கண் பார்வை குறைவடைதல்
(3) உடல் பொலிவிழத்தல்

32 ஏனைய மனிதர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் செயற்பாடு அல்லாதது எது?

(1) மக்கள் சஞ்சரிக்கும் உரத்த குரலில் தொலைபேசியில் உரையாடுதல்.
(2) அழுக்கான ஆடைகளுடன் சன நெரிசலான பொது இடங்களில் சஞ்சரித்தல்.
(3) வாகனங்கள் செல்லும் தெருவில் வெள்ளைக்கோட்டில் வீதியைக் கடத்தல்.

33. வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக பண்டைக்காலத்திலும் தற்காலத்திலும் பயன்படுத்தும் உபகரணங்களாக முறையே அமைவன எவை?

(1) கப்பி, சாய்தளம் *(2)* மரக்குற்றி, பற்சில்லு *(3)* மின்காந்தம், கட்டுமரம்

34 காலவேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரங்களைக் கொண்ட தொகுதி எது?

(1) தாமரை, வாழை *(2)* தென்னை, இலுப்பை *(3)* செவ்வரத்தை, தென்னை

www.lkdu.lk

35. சரியான கொண்ணிலையைப் பேணி நடக்கும் ஒருவரின் பாதச்சுவடுகள் எவை?



(1)



(2)



(3)

36. பின்வருவனவற்றில் அதிபரின் அலுவலகத்தில் காணக்கூடியது எது?

(1) பேற்றுக்கம்பம் (2) சுருதிப்பெட்டி (3) தின வரவு இடாப்பு

37. அனல் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தும் மூலப்பொருளாக அமைவது எது?

(1) சூரிய ஒளி (2) நிலக்கரி (3) வைக்கோல்

38. ஆக்கம் ஒன்றினைச் செய்வதற்கு தேங்காய் சிரட்டையின் மேற்பரப்பின் சோற்றிப் பகுதியை நீக்கி ஒப்பமாக்கப் பயன்படுத்தக்கூடியது எது?

(1) அரம் (2) சீவுளி (3) அரத்தாள்

39. 

அருகில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தை அதிகம் பயன்படுத்துவோர்.

1) மேசன் வேலைகளைச் செய்வோர்
2) தச்சன் வேலைகளைச் செய்வோர்
3) கொல்லர் வேலைகளைச் செய்வோர்

40. நாட்டின் பெருமையும் தனித்துவத்தையும் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் குறியீடுகளில் ஒன்று எது?

(1) நாகமரம் (2) சிங்கம் (3) ஒளிப்படம்

41. அதிக கால்களைக் கொண்ட பிராணி

(1) மண்புழு (2) மட்டைத்தேள். (3) கரப்பான் பூச்சி

42. கைபிடி கொண்ட கோப்பைகளில் சூடான உணவுப் பானங்களை பரிமாறும்போது அந்தக் கோப்பையின் கைபிடியின் பக்கம் அமைய வேண்டிய முறை எது?

(1) பெறுபவரின் இடது பக்கம்
(2) பெறுபவரின் வலது பக்கம்
(3) பெறுபவரின் முன் பக்கம்

43. 'பவானி வீட்டில் தனியாக இருக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் வியாபாரத்திற்காக வந்த ஒருவர் ரொபி ஒன்றை வழங்கி தம்முடன் வருமாறு அழைத்தார்' இச் சந்தர்ப்பத்தில் பவானி செய்யக்கூடிய செயல் அல்லாதது எது?

(1) வியாபாரியுடன் செல்வதைத் தவிர்த்தல்
(2) உறவினர்களை உதவிக்கு அழைத்தல்
(3) வியாபாரி அழைத்த இடத்திற்கு செல்லுதல்

44. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கம்பி மீது நீர்த்துளி ஒன்றினை இடும்போது உடனடியாக யாது நிகழும்?

(1) நீர் பரவும் (2) தீ அணையும் (3) ஒலி எழும்

45. பொதுப் போக்குவரத்து சேவையினால் கிடைக்கும் அனுகூலங்களில் ஒன்று எது?

(1) குறைந்த செலவில் பயணிக்க முடிதல்
(2) குறித் நேரத்தில் மட்டும் பயணிக்க முடிதல்
(3) பயணச் சீட்டுப் பெற்றுப் பயணிக்க முடிதல்

JAFFNA EDUCATION

www.lkdu.lk

46. வீட்டுத்தோட்டம் ஒன்றினை அமைக்கும் செயற்பாடுகளின் ஆரம்ப நிலம் பண்படுத்தலுக்கான படிமுறையாக முறையே அமைவது எது?

(1) வரம்பு அமைத்தல், களைபிடுங்குதல்
(2) நீர் ஊற்றுதல், வரம்பு அமைத்தல்
(3) மண்ணைத் தூர்வையாக்கல், வரம்பு அமைத்தல்

47.  அருகே உள்ள ஓவியமானது காணப்படும் இடம் எது?

(1) தலதாமாளிகை
(2) சிகிரியா
(3) தம்புள்ளை

48. கூட்டுச் சந்தை தொகுதிகளில் பணக்கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படும் இலத்திரனியல் முறை எது?

(1) காசோலை மூலம் பணம் செலுத்தல்
(2) டெபிற் அட்டை மூலம் பணம் செலுத்தல்
(3) நாணயத் தாள் மூலம் பணம் செலுத்தல்

49. 'கால்நடை காத்து மகிழ்ந்திடுவான்
கவலை மறந்தே வாழ்ந்திடுவான்
தோல் கறுப்பாக இருந்தாலும்
தூய உள்ளம் பெற்றிருப்பான்' இப்பாடலில் குறிப்பிடப்படுபவரின் தொழில் எது?

(1) மீன்பிடித்தல் (2) சுரங்கம் அகழ்தல் (3) விவசாயம்


50. திடீர் விபத்தினால் காயமடைந்த நபர் ஒருவருக்கு அனுப்பக்கூடிய வாழ்த்து அட்டையில் உள்ளடங்க வேண்டிய விடயம் எது?

(1) நன்றி நவிலல் (2) அனுதாபம் கூறல் (3) நலம்பெறப் பிரார்த்தனை

51. சூரிய ஒளியிலிருந்து நாம் பெறும் பயனாக அமைவது எது?

(1) உப்பைப் பிரித்தெடுத்தல்
(2) நிழலான இடம் கிடைத்தல்
(3) உலர்ந்த பொருட்கள் ஈரலிப்பாதல்

52. அருகே உள்ள காற்றுத்திசை காட்டியில் அம்புக்குறி காட்டும் திசை தொடர்பான சரியான கூற்றாக அமைவது எது?



(1) காற்று எந்தத் திசையிலிருந்து வீசுகின்றது எனக் காட்டுகிறது
(2) காற்று எந்தத் திசை நோக்கி வீசுகின்றது எனக் காட்டுகிறது
(3) காற்று வீசும் திசையிலிருந்து எதிர்த் திசையைக் காட்டுகிறது

53. நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்தவர்களில் திபெத் நாட்டில் பிறந்து இலங்கையில் பிக்குகள் சபையின் பதிவாளராக இருந்தவர்.

(1) ஆதர்.சி. கிளாக் (2) வண.எஸ். மகிந்த (3) துட்ட கைமுனு

54 

குறித்த பூவில் A என்ற ஆங்கில எழுத்தினால் குறிப்பிடப்படும் பகுதி எது?

(1) தம்பம் (2) குறி (3) மகரந்தம்

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu


ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk


55. லாவுலுப் பழத்தில் அடங்கியுள்ள போசணைக்கூறு எது?

(1) விற்றமின் A (2) விற்றமின் C (3) விற்றமின் B


56. இரு உலர் மின்கலங்கள் (C) ஒரு மின்குமிழ் (B) ஓர் ஆளி (S) இணைக்கப்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளன. ஆளி S ஐ மூடும் போது மின்குமிழ் ஒளிரும் உரு எது?



(1)



(2)



(3)

57. நெருப்பினால் விபத்துக்குள்ளான நபர் ஒருவருக்கு செய்யக்கூடாத செயல் எது?

(1) களிம்பு பூசுதல் (2) தண்ணீர் ஊற்றுதல் (3) குளிர்ந்த நீர் ஊற்றுதல்

58. நீருள்ள கண்ணாடிக் குவளைக்குள் பனிக்கட்டியை இடும்போது குவளைக்கு வெளியே நீர்த்துளி தோன்றக் காரணம் யாது?

(1) குவளைக்குள் இருக்கும் நீர் கசிந்து நீர்த்துளியாகத் தோன்றுகிறது.
(2) குவளைக்கு வெளிப்புறத்தில் உள்ள நீர் நீர்த்துளியாகியுள்ளது.
(3) வளியில் உள்ள நீர் குளிர்ச்சியடைந்து குவளையில் படிகிறது.

59. உடைந்த கண்ணாடித் துண்டுகளை போடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட கூடையின் நிறம் எது?



(1) நீலம்
(2) செம்மஞ்சள்
(3) சிவப்பு

60. "ஒரு நாள் எனது வகுப்பறையில் நிகழ்ந்தவை " எனும் தலைப்பின் கீழ் நீங்கள் எழுதிய நாட்குறிப்பு தொடர்பான **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

★★★★

முற்றிலும் இலவசமாக இந்த வினாத்தளுக்கான விடைகளையும் நுட்பங்களையும் வீடியோ வடிவில் காண்பதற்கு **JAFFNA EDUCATION YouTube** தளத்தினை நாடுங்கள்